எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றும்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவிஞரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 11 கற்பனை 4] திருச்சி 15—4—68 [தனிப் பிரதி 25 காசு

திருத்தவத்துறை சன்மார்க்க சங்க ஆண்டுவிழா கவியரங்கில்

'வள்ளலார் வழியில்'

தலைமைக் கவிதை

அருளுருவே! அருட்சுடரே! ஆனந்த வடிவே!
ஆன்மாவின் ஒளிகாட்டும் அருட்ஜோதி மணியே!
மருளகற்றி எம் மனத்தில் சுத்த சிவமார்க்கம்
வளர்க்க வந்த அருட்சுடரே நற்றுயே போற்றி!
இருட்குகையாம் எங்கள் மனம் தன்னில் கவிந்திருக்கும்
இருளகற்ற அருட்ஜோதி ஏந்திவந்த சித்தா!
குருமணியே! ஒளிமணியே! சமரச சன்மார்க்க
கொஞ்சு தமிழ் விஞ்சு புகழ் குருமணியே சரணம்.

வடதிசையே நோக்காக உடலூரைக் காணீர்
மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் வாரீர்
படமெடுத்த மண்ணுடலைப் பொன்னுடலாய்ச் செய்து
பரமன்உறை திருக்கோவி லாக்கிடலாம் கேளீர்
உடலிதனில் கால் ஐந்தின் விஷம்போக்கிக் காத்து
உள்ளொளியால் பேரொளியை அன்பதனால்தேக்கி
திடமுறும் நற்றூய்மையினால் ஸகஸ்த்ர தளமேவும்
திருவருளைக் கண்டுய்கவென்ற குருமணிதாள் போற்றி!

உந்தியிலே எழுந்திட்ட எண்ணமதைக் கொண்டு
உயர்காலின் தாண்டவத்தை முனைமூக்கில் கண்டு
சந்தியெனும் புருவமத்தி ஒளிச்சுடரும் ஓங்க
சார்ந்தஉடல் அகலாக செங்குருதி நெய்யாய்
விந்ததுதான் திரியாக அணையாது காப்பீர்
விமலனவன் திருநடனம் மெய்யுடலில் காண
சந்ததமும் சன்மார்க்க நெறியதனில் வாழ
தமிழ்க்குலமே! வருகவென்ற சற்குருவே போற்றி!

கடலலைபோல் அலையலையாய் கவிதையது பொங்க
கனகசபை ஆடுகின்ற நடன சிகாமணியை
சுடர் முத்தீதனையறிந்து ஜீவதயை யோடு
ஜோதி வடிவான அருட் கருணைநிறை இறையை
உடலதனில் புலன்கூப்பி மனம் குவிந்துகாண
உவந்தனை நீ திருவருட்பா தெய்வமறை என்ன
வடலூரின் தவவிளக்கே வள்ளல் பெருமானே!
மலர்த்தாள்கள் என்றென்றும் வழிகாட்ட வேண்டும்.

வான்கலந்த ஆனந்த வாசகமாம் மணியின்
வல்லபத்தைச் சித்தியல்பை சத்தியத்தைத் தேறி
ஊனுருக்கி உடலுருக்கி உள் ளெலும்பும் உருக்கி
ஒப்பில்லா அன்புரும் அருள்இன்ப வுருவும்
தான்பெறவே விளைந்தருளால் தவசித்திபெற்றே
சத்திய சன்மார்க்கமெனும் சாதனைகள்காட்டி
தேன்தமிழில் அருட்கவிதை கருணையினால் தந்த
சித்தி விளக்க மாமணியே தவக்கனலே! போற்றி!

தொட்டவரை சிவமாக்கும் திருவருட்பா தந்த
செந்தமிழே! ஜோதி அருட்சுடர்மணியே! எங்கள்
விட்டகுறை தானறிந்து அருட்பாவில் மூழ்க
விழைகின்றோம் வெம்புகின்றோம் விழிநீர் சிந்தி
எட்டநின்று எமைநோக்கி இருக்கத் தங்கள்
இதயமலர் கனியாமல் இருப்ப தென்னே!
தட்டின்றி எம்நாவில் சற்குருவே ஜோதி
தங்கிகொலு வமர்ந்துகவி தான்பொழிய வேண்டும்.

அருட்ஜோதி மாமணியே கவியரங்கம் வந்து
அன்போடு கவிஞர்கள்செய் கவிஅஞ்சலியை ஏற்று
விருப்போடும் பொருப்போடும் அருட்கனிவோடும்
வினயமொடும் கவிபாடும் செந்தமிழைக் கேட்டு
கருப்பொருளாம் நினதுகருத்துக் கடல்மூழ்கி யாங்கள்
கண்டெடுத்த சிறுமுத்துசொத்தை யென்றபோறும்
அருட்ஜோதி ஆண்டவனே ஏற்றுமகிழ் வெய்தி
அருள்ஆசி தந்தெமக்கு ஒளிகாட்ட வேண்டும்.

வாழ்வியலில் ஆறுமுகம் கொண்ட கவிவாணர்
வகுத்து ரைத்தார் வள்ளல்பிரான் கூறும்நெறியாவும்
தாழ்வுபெறும் மானுடமே வாழ்வுபெற வென்றே
சமரசன்மார்க்க மென்ற வாழ்வியலைத் தந்து
வீழ்வு தடுத்தாண்ட எங்கள் அருட்பெருஞ்சோதி
வித்தகமே விரிந்து தனிப்பெருங் கருணைதாய்மலர
வாழ்விக்கும் என்றுரைத்தஆறு கவிஞர்களும்வாழி அவர்
வாய்அசைப்பில் மனநெகிழ்வில் வந்த செந்தமிழும்
[வாழி!

முடிவுரை

கடல்மடை திறந்ததென தமிழ் கவி பாடும் யோகி
கதவுதட்டி உனையெழுப்பி நடராஜமணியும்
வடலூர் வந்துன் பொற்கரத்தில் தன்திருத்தாள் வைக்க
வாரியெடுத்தணைத்து மகிழ் வடலூர்மாமணியே!
உடல்முழுதும் வெண்துகிலால் நின்கதிர் மறைத்துநின்றாய்
உருப்பளிங்கு ஜோதிபடில் உணர்விழப்போ மென்றே
இடருற்று அறிவிழந்து நிலைகுலைந்த எம்முன் இன்று
இருந்திட்டால் வெந்திடுவோம் எனமறைந்தாய் ஐயா!

கற்பூரம் போல் மணக்குதுய்ய திருவடிவம்
கரைத்திட்டார் அணுக்குவையாய் வையகமே அரிய
சொற் பதங்கள் கடந்தபிரான் திருவருப்பாபாடி
சிதம்பரத்துக் கூத்தனை தன் சிதாகாச மேற்றி
உற்பவத்தின் முடிமாற்றி மரணமிலா வாழ்வை
உவந்துவிட்ட அருட்ஜோதி யுட்கலந்த ஞானி
விற்பன்ன இராமலிங்கர் சித்தி விளக்கமாகி
மெய்கரைந்து விண்கலந்த வித்தகமே வாழி!

செத்தாரை எழுப்பிடுவோம் சித்துபல புரிவோம்
சிதம்பரத்துக் கூத்தாடி தேவ வுருத்தாங்கி
சத்தாக வரும்தருணம் சன்மார்க்கசங்கம்
தனைவாழ்த்த பெருங்கருணை தயவுவைத்த தருணம்
கொத்தோடே குலத்தோடே சன்மார்க்க ராவீர்
குலத்தோடு குலம் ஒன்றி உயிர் கொலைகள்விட்டே
வித்தாகி விதையுள்ளே விளையாடும் பரமன்
வேதாந்தம் காணுதஞானமுடி வருவான்

பொன்னான உடலை இனிபொசுக்காதீர் சொன்னோம்.
புதையலென சமாதி வைத்து காத்திடுவீர் நன்றே
என்மார்க்கம் சன்மார்க்கம் சமாதியிலே வைப்பீர்
இறந்தவு டலானாலும் பொன்னுடம்பே யன்றோ!
மன்னர் எங்கள் அருட்ஜோதி மகிழ்ந்துவரும் போது
மடிந்தவர்கள் யாவருமே பிழைத்தெழுவார் அன்று
தன்மானத் தமிழ்க்குலமே சன்மார்க்கம் சேர்ந்து
தனித்தலைவர் வரும்தருணம் நெறியுடனே வாழ்வீர்!

பசித்தொருவன் வாடுகையில் பார்த்திருக்க வேண்டாம்
பசிதீர்க்க முன்வருவீர் போராட்டமில்லை
கசிந்துருகும் உளம்கொண்டு அன்பு செய்வீரானால்
காசினியில் போரில்லை மதமாச்சர்ய மில்லை
நசிந்திடவே எண்ணமதை நாட்டாதீர் உளத்தே
நாதன் வருவானங்கு நல்லதையே கொள்வீர்
வசிப்பதற்கு இடம் தேடும் ஒற்றியூர் தேவன்
வந்திடுவான் உம்மிடத்தே வென்றுரைத்தார் ஐயா!

ஐயாவின் பொன்னடிகள் அனுதினமும் போற்றி
அருட்பாவில் அவர்காட்டும் வழிபலவும் தேறி
கையாற மற்றவர்க்கே உழைத்துதவி செய்து
கருணையதுதான் கொண்டு அருட்ஜோதி பெறுவீர்
நையாத மனம்கொண்டு மெய்யுடலைக் காத்து
நன் மார்க்கம் சன் மார்க்கநியதிகளை ஓர்ந்து
பெய்யாத நீர் காத்து புலப்புரவி ஏறி
புவிவாழ்க நாம் வாழிவோம் அருட்ஜோதி பெறுவோம்

குருதியிலே புலால் குழைத்து நரம்பாலாயகுடிலை
குடக்கூலிதான் பெற்றே உயிர் வாழ விட்டான்
பருவுடலின் வாடகை மணிக்கணக்கில் வாங்க
பசியென்ற பாவியையும் ஐந்து வேடர்களும்வைத்தான்
ஒருகணமும் அமைதியில்லா மனம் எனனும் மனையை
உடன்வைத்தான் இச்சையெனும் பிச்சை மகனோடு
தரு நிழலே கால்கட்டி ஒளிவழியால் சகஸ்த்ரதளமேவும்
சதாசிவனை நானடைய வழி காட்டவேண்டும்.

மாந்தர்களும் பறவைகளும் புழுபூச்சி எல்லா
மரம் செடி கொடி யாவும் தம்குலமே வென்று
ஓந்து அவர் வாடுகின்ற வருத்தமெலா மேற்று
உளம் கசிந்து தமிழ் பாடி வருந்தி நின்ற மணியே!
காந்தமெனும் பாசத்தால் ஈசன் அருள்பாடி
காசினிக்காய் கரைந்தழுத சாந்தகுணநாதா
ஏந்தலே அருட்ஜோதி ஏற்றிவந்த தேவ!
எல்லாமும் வல்லானே எமைவாழ்த்த வாராய்

மாமணியே சித்தி விளக்கமான சற்குருவே!
மன்னுலகில் நின்நிழலும் யாம்காணு ருனோம்
தேமதுரத் தமிழ்க்குரலைக் கேட்டறியா மக்கள்
திசைமாறி அவலநிலை செல்லுகிறார் இன்றே
வாமதுர மொழிபேசி எத்தர் வாழ்கின்றார்
மனம்கலங்கி திகைக்கு மெங்கள் வருத்தமதுதீர
இராமலிங்க மாமணியே வந்தெமையே காக்க
நாதனருளோடு வந்து கவி யழிக்கவேண்டும்.

கவியரங்கில் கலந்துகொண்ட கவிஞர்களும் அண்ணார்
கவிதைகளில் பேசிநின்ற சத்தியமாம் சொல்லும்
செவிகுளிர கவியரங்கைக் கேட்டு மகிழ்வெய்யத்
திரண்டிருக்கும் சான்றோரும் சன் மார்க்கத்தாரும்
புவியிதனில் நெறிநின்று கொலைபுலையும் தள்ளி
குணமிகுந்து எவ்வுயிர்க்கும் கசிந்துருகு வோர்க்கும்
அவியாத நின் உள்ள ஜோதி ஒளி காட்டி
ஆதரிக்க வேண்டுகிறேன் அருட்பெருஞ் சோதி!

கடைசி பக்கம் பார்க்க

எழுத்தாளன்

கனவு 11] கீலக, சித்திரை (15-4-68) [கற்பனை 4

சர்க்காரும் - சட்டமும்

தமிழ் மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக் களை தமிழ் எழுத்தாளன் தெரிவித்துக்கொள்கிறான். தமிழ் மக்கள் ஒவ்வொருக்கும் தம்மைத்தாமே அடக்கி ஆளும் தன்மை சித்திக்கவேண்டும் என்று எல்லாம்வல்ல பரம் பொருளை தன் சிந்தனை சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்து எழுத்தாளன் பிரார்த்திக்கின்றான.

நெஞ்சகத்தில் தீயதை நினையாதே என்று பச்சைத் தமிழில் பாலர்களும் அறியும் வண்ணம் சொன்னவன் தமிழன். தமிழ்மொழி அன்பின் படையல். ஆழமும், அகல மும் உடையது. தகுதிக்கேற்ப ஒரு சொல்லே பல பொரு ளைக் காட்டும். கருத்தைக் காட்டும். அந்த சொல்லே அதனைப்பெற ஒரு வழியையும் காட்டும். எனவேதான் கலைமகளும் இன்றும் கற்றுவருகிறாள் என்பதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். தமிழ்மொழியை கற்றவர்கள் அந்த மொழி யின் தனிச்சிறப்பான பண்பையும் பெறவேண்டும். அவ் வாறு பெற்றவர்களை புலவர்கள் என்று சொன்னார்கள். படிப்பால் கிடைத்த பட்டமல்ல புலவர் என்பது. எவ்வுயி ருக்கும் தீங்கு எண்ணாமல் தன்புலன் உணர்வுகளை அடக்கியவனே புலவன் என்று போற்றப்பட்டான்.

எவ்வுயிருக்கும் தீங்கு எண்ணாத தூய உள்ளமே தமிழ் உள்ளம். தீங்கு எண்ணாத உள்ளங்களை மனிதர்கள் அறிகி றார்களோ என்னவோ, கொடிய விலங்குகள் அறிகின்றன. தூய உள்ளத்தில் இருந்து எழும் ஒரு மணத்தை விலங்கு கள் அறிந்து தம் இயல்பையும் மாற்றி அங்குவந்து சாந்தி பெறுகின்றன. தான் கற்ற கல்வியின் சிறப்பை தூய உள் ளம் படைத்தவன் விளங்கப்பெறுகிறான். தன் கல்லாத கல்வியும் அவன் தன் உள்ளத்தால் கற்பிக்கப்பட்டு அனுப வம் பெறுகிறான் என்று அனுபவித்தவர்கள் சொல்லுகிறார் கள். அவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு சொல்லும் சாஸ் திரம் என்று மதிக்கப்பட்டது, போற்றப்பட்டது, பின்பற்றப் பட்டது,

கால மாறுதல்களால் விஞ்ஞான வளர்ச்சியும் நாகரிக முனைப்பும் சேர்ந்து சாஸ்திரங்களுக்குச் சட்டங்கள் என்றும் சாஸ்திரிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் என்றும் பெயர் சூட்டியது. சாஸ்திரிகளுக்கு அன்று சமூகத்தில் இருந்த அந்தஸ்து இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக் கிறது. அரசியலார் சட்டமன்ற உறுப்பினர்களை இனி சாஸ்திரிகள் என்றே குறிப்பிட்டு அறிவிப்பு செய்யலாம்.

அன்று நாட்டின் நன்மையைக் கருதி அரசும், தனி பட்டவர்களும் தீ வளர்த்து யாகங்கள் நடத்தினார்கள் அதனை நடத்துகிறவர்களை சாஸ்திரிகள் என்றும் யாகப நடக்கவிடாமல் செய்கிறவர்களை அரக்கர்கள் என்று சொன்னார்கள்.

இன்று தீயின் அம்சமான மின்சக்தியைக் கொண்டு தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அதனை நடத்துகின்றவர்களை பொறிஇயல் வல்லுனர்களென்றும் நடக்கவிடாமல் செய் கின்றவர்களை போராட்டத் தலைவர்கள் என்றும் குறிப்பிடு கிறோம். யாகசாலை — தொழிற்சாலை இரண்டும் அடிப்படை யில் ஒன்றுதான். காலநிலைக்கேற்ப பெயர் மாற்றங்கள் அவ்வளவுதான்.

தனி மனிதன் தன் அந்தஸ்து கௌரவம், பலம், செல் வம் அனைத்தையும் அரசுக்கு விட்டுக்கொடுத்து தான் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருந்து, தனக்கு மற் றவர்களால் தீங்கு ஏற்படும்போது அரசின் துணைகொண்டு அதனை சமாளிக்க ஒப்பித்தான் சட்டத்திற்கு உட்பட்ட குடிமகனாக வாழுகிறான்.

தீங்கு செய்யாத குடிமகனைத் தாங்கி அரசு, தன் பலம் கொண்டவனை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரித்து தண்டனை கொடுக்க முன்வருகிறது. அரசுக்கு இருக்கும் பலம் தனி மனிதன் விட்டுக்கொடுத்தது ஆகும். போலீஸ் அதிகாரி பலம்படைத்தது அரசு தன் சேவைக்கு பின்பலம், அரசுக்கு மக்கள் ஆதரவு பின்பலம் என்பதுதான். போலீஸ் அதிகா ரிக்கு சட்டம் என்பது கவசம்.

தனி மனிதனுக்கும் சட்டம் கவசம் என்ற நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும். சட்டம் தனக்குக் கவசமாக இல்லை. தன் பலத்தைக் கொண்டே தனக்குப் பாதுகாப் புத் தேடிக்கொள்ள வேண்டும் என்று மக்கள் நினைத்து விட்டால் அங்கு நல்லாட்சி இல்லை யென்பது பொருள். எவராயிருந்தாலும் சரி. சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம். தீங்கு செய்வோன் மட்டுமே சட்டத்திற்கு அஞ்ச வேண்டும். அது அவனை தேடி கண்டுபிடித்து தண்டித்து விடும் என்ற பயம் இருக்கவேண்டும்.

ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சியில் உள்ளவர்கள் சட்டத்திற்குரிய மதிப்பு தராவிட்டால், மக்களும் சட் டத்தை மதிக்கமாட்டார்கள். தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆகிவிடுவான். ஆட்சியில் இருப்பவர்கள் முதலில் சட்டத்தை மதிக்கவும் அதனை பாரபட்சமின்றி அமுல் நடத்தவும் முன்வர வேண்டும்.

அதிகார மமதையால் சட்டத்தை மீறவும், சட்டத்தை தமக்குச் சாதகமாக்கவும் முனைந்தவர்கள் பலரது வரலாறு கள் நமக்குச் சரித்திர சான்றுகளாக இருக்கின்றன. அவர் வாழ்வும் தாழ்வும் நமக்குப் புகட்டுவது சட்டத்தை நாம் மதிக்கவேண்டும் என்பதுதான்.

நாட்டு மக்களின் நலனில் அக்கறை காட்டாதவர்கள் தமக்குச் சாதகமாக சட்டத்தை உருவாக்கி அமுல் நடத் தினால் அதனை மாற்றி அமைக்கவே ஜனநாயகத்தில் தேர்

கடைசி பக்கம் பார்க்க

கடவுளின் திருநாமம்

[நா. சேதுராம்]

எல்லாம்வல்ல இறைவன் பல வடிவங்கள் கொண்டு இவ்வுலகில் அவதாரங்கள்எடுத்து பலலீலைகள் புரிந்தான். சிவனாயினும் சரி, விஷ்ணுவாயினும் சரி, வேறு மதத்திய கடவுளர் ஆயினும் சரி கடவுள் ஒருவரே. தண்ணீர் எங்கும் மழையின் மூலம் வந்த ஒன்றே. கங்கையாக வரினும் காவிரியாக ஓடினும், மூலப்பொருள் மழைத்துளிகளே. சமுத்திரத்து உப்புத் தண்ணீரும் அஃதே. அதே போல் கடவுள் தத்துவம் ஒன்றே. வழிபடும் ஆன்மாவிற்கு ஏற்ப, தேசம், காலம், வர்த்தமானங்களுக்கு ஏற்ப கடவுளின் ரூபம், தன்மை, பெயர் எல்லாம் வேறுபடுகின்றன. மனிதனால் வேறுபடுத்தப்பட்டுள்ளன. அந்தந்த அவதாரங்களுக்கு ஏற்ப, அவருடைய லீலைகளைக் கொண்டு, கடவுளின் பெயர் ஏற்பட்டது. மனிதர்களால் சூட்டப்பட்டது அநாதிகாலம் தொட்டு, இப்பெயர்களை மனத்தில் ஸ்மரித்து நாவினால் உச்சரித்து, உணர்ந்து உருகி ஸாயுஜ்ய பதவியை அடைந்தவர்கள் பலர்.

இன்றுள்ள விஞ்ஞான உலகில், கடவுளின் நாமாவை உச்சரிப்பதினால் ஒருவர் எப்படி ஸாயுஜ்ய பதவி அடைய முடியும் என்பதை நம்பமாட்டார்கள். ஆனால் கம்பியில்லாத் தந்தியை நம்புகிறார்கள். மனிதன் மனம் உருகி, வெதும்பி, விம்மி, உணர்வாக உரைக்கும் நாமாவை கடவுள் கேட்டு, உடன் அவனுக்கு ஸாயுஜ்ய பதவிக்கு வகை செய்கிறார். இது பற்றியே சாகும் தறுவாயிலும் தன் வாயில் கடவுளின் நாமா வந்து தன் ஜன்மா கடைத்தேற வேண்டும் என்று தன் பிள்ளைகள், பெண்கள் இவர்களுக்கு ஒவ்வொரு பெற்றோரும் கடவுளின் திருநாமாவையே சூட்டுகிறார்கள். தட்டுத் தடுமாறியாகிலும், அடிக்கடி கூப்பிட்ட பழக்கதோஷத்திலாகிலும் கடவுளின் நாமாவை தங்களை அறியாமலே தாங்கள் சொல்லலாம். அடிக்கடி குழந்தைகளை கூப்பிடும் சாக்கிலாகிலும் நாமாக்களை உச்சாடனம் செய்யலாம் என்றும் நினைக்கிறார்கள்.

மேலும் நமக்கு ஒரு கஷ்டம் வந்தாலும், உடல் கஷ்டமானாலும் சரி, மனக் கஷ்டம் ஆனாலும் சரி, உடனே அம்மா! என்று அலறுகிறோம், அப்பா! என்று கூவுகிறோம். ஐயா! என்பதையே ஐயோ! என்று திரிபுபெற அலறுகிறோம். உடன் நம் உணர்வைச் சோதித்தால் நமக்குப் புரியும். கொஞ்சம் மனவேதனையோ சரீர வேதனையோ எதுவாயினும் சரி குறைந்ததாக உணர்கிறோம். மன வேதனை சகிக்காதபோது வாய்விட்டு அலறுவதில்லையா? எங்கேயாவது, யாரிடமாவது சொல்லி ஆற்றிக் கொண்டால்தான் தேவலாம் போல் இருக்கிறது என்று நாம் கூறுவதில்லையா? இதேபோல்தான் கடவுளின் நாமாவளியை, திருநாமங்களை படிக்கும்போதும், சொல்லும்போதும் நம் மனம் ஆறுதல்பெற்று ஒரு நிலைப்பட ஏதுவாகிறது. அலையும் மனம் ஆறுதல்பெற எண்ணங்கள் ஒருமுகமாக நிலைபெற நாமாவளிகள்தான் முக்கியம். இதுபற்றியே கோவில்களில் அர்ச்சனைகள் உள்ளன. விஷ்ணு ஸஹஸ்ரநாமாவளி, லலிதா ஸஹஸ்ர நாமாவளி, போன்றவைகள் சித்தப் பிரமை போன்ற மனோவியாகூல வியாதிகளை போக்கடித்ததை நேரில் கண்டவர்களும் அநுபவித்தவர்களும் பலர் இருக்கிறார்கள்.

இதுநிற்க, நம் பெரியோர்கள் கூறுவதைக் காணலாம். நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே, தின்மையும் பாவமும் சிதைந்துதேயுமே சென்மமும் மரணமும் இன்றித் தீருமே, இம்மையே இராமா என்று இரண்டு எழுத்தினால் என்றும் "நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம், வீடியல் வழியதாக்கும் வேரியம் கமலை நோக்கும், நீடிய அரக்கர்சேனை நீறுபட்டழிய வாகை, சூடியசிலையி ராமன் தோள்வலி கூறுவோர்க்கே" என்றும், ராமநாமாவின் நன்மையும் வலிமையும் உணர்த்தப்படுகிறது. மஹாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களும், குந்தியும், துரௌபதையும் கிருஷ்ணனை ஸ்மரித்தே வெற்றி பெற்றனர். சுகப்ருஹ்ம ரிஷி கிருஷ்ணனின் நாமாவைக் காதால் கேட்டாலே மோனநிலை எய்தி, கண்ணபிரானுடன் ஐக்கியமாகிறார். ராமாயணத்தில் ஹனுமான் ராமநாமாவையே தன் மூச்சுக் காற்றாக கொண்டுள்ளார். ராமகீர்த்தனங்கள் எங்கெங்கு நடக்கிறதோ அங்கங்கு கூப்பிய கைகளுடன் மெய்ம்மறந்த நிலையில் ராமநாமாவை கேட்டு ஆநந்திக்கிறார். ராமநாமம் ஹனுமனை பக்தனின் உச்சாணி எல்லையில் கொண்டு நிறுத்திவிட்டது. எங்கு நோக்கினாலும், எப்புராணத்தைப் புரட்டினாலும் ஹனுமனைவிட பக்திமான் யாரும் கிடையாது. இதற்குக் காரணம் நாமாவளிதான்.

மேலும் சிவநாமம் எப்படியெல்லாம் நன்மை பயக்கிறது என்றால் அதைப் பரிபூர்ணமாக உணர்ந்த எம்பிரான் திருநாவுக்கரசர் வாயிலாகவே பார்ப்போம்.

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்,
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே,
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே".
"சொற்றுணை வேதியன், சோதிவானவன்,
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்
[கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்,
நற்றுணையாவது நமச்சிவாயவே".

என்றார் அப்பர்.

கல்தூணில் கட்டப்பட்டு கடலினுள் பாய்ச்சப்பட்டபோதும் நமசிவாயம் என்னும் நாமாவளியை சொல்லிக் கொண்டே மிதந்து கரைசேர்ந்தார் அப்பெரியார். கல்தூணும், மரக்கலமாகியது அவருடைய சொந்த அனுபவத்தில் ஏற்பட்டவொன்று. திருமங்கையாழ்வார். நாராயணா வென்னும் நாமம் எப்படிப்பட்டது என்று உண்மையாகவே கண்டுகொண்டார்.

"குலம்தரும், செல்வம்தந்திடும்,
அடியார் படுதுயராயின எல்லாம்
"நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்புஅருளும்
அருளோடு பெருநிலம்அளிக்கும்
"வலந்தரும் மற்றும்தந்திடும்
பெற்றதாயினும் ஆயினசெய்யும்
"நலந்தரும் சொல்லைநான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்.

என்றார் அவர்.

நம்மாழ்வாரோ "போற்றி யென்றே கைகளாரத்தொழுது சொல்மாலைகள்

ஏற்ற நோற்றேற்கு இனி என்ன குறை எழுமையுமே" என்றே மனத் திட்பமுடன் நாமாவளியின் பயனை உரைக்கிறார்.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் "நிதியராகுவர், சீர்மைஉடையராகுவர், வாய்மை நெறியராகுவர், பாவம் வெறியராகுவர், சாலமதியராகுவர், ஈசன் அடியராகுவர் வானம் உடையராகுவர் பாரில் மனிதராகுவர்" என்கிறார். யார்? கடவுளின் நாமாக்களை விடாது உச்சரிப்பவர்களே.

"சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" என்று அபயம் கொடுக்கிறார்.

கடைசி பக்கம் பார்க்க

சிறை!

(மா. சௌந்தரராசன்)

விரிவானம் சிறைவைக்கும் நிலவை; தென்னை
விரிக்கின்ற பாளைதனில் பதநீர் வைக்கும்!
திருச்சங்கு சிறைவைக்கும் இசையை; துள்ளித்
திரிகின்ற கடல்வைக்கும் தன்னுள் முத்தை!
மருக்கொழுந்து சிறைவைக்கும் மணத்தை; தாயின்
மணிவயிறு துடிக்கின்ற உயிரை வைக்கும்!
எரிவிளக்கு சிறைவைக்கும் இருளை; அந்த
இருட்சிறையோ வைத்திருக்கும் எழிலையெல்லாம்!

காதலிளம் நெஞ்சத்தில் கறையாம்; கம்பன்
கவிதையின்பால் இன்பமெலாம் சிறையாம்; துன்ப
வேதனையில் வாழ்க்கையொரு சிறையாம்; அய்யோ
விதவைமகள் துடிப்பெல்லாம் சிறையாம்; ஆமாம்
சாதலுக்குப் பின்குழியே சிறையாம்; கண்ணீர்ச்
சரமெல்லாம் விழியுள்ளே சிறையாம்; இந்தச்
சாதிமதப் பிணக்குள்ளே கதவை மூடிச்
சாய்ந்துமனம் வாழ்வதும்ஓர் சிறையே போலாம்!

———

சிவந்த விரல்

(சாலை இளந்திரையன்)

மண்ணில் நெடுநெடுக வேர்விடுவோம்—அந்த
வானப் பரப்பிலெங்கும் கார்விடுவோம்!
எண்ணப் பெருவயலில் ஏர்விடுவோம்—பயிர்
ஏற்றிப் புதுப்புதிய பேர்இடுவோம்.

மண்ணைக் குடைந்துதெளி நீரெடுத்தோம்—அந்த
வானைப் பிழிந்தமுதச் சாறெடுத்தோம்!
கண்ணைக் கசக்குகிற சேய்களுண்டோ?—நாம்
கால்கை விசைத்தபின்னர் நோய்களுண்டோ?

மண்ணைச் சலித்தெடுக்க நாம்குனிந்தோம்—அந்த
வானின் முகடிடியத் தோள்நிமிர்ந்தோம்!
திண்ணைப் பழங்கதைகள் நாம்விடுத்தோம்—திசை
தீண்டிச் சிவந்தவிரல் தான்எடுத்தோம்!

———

தெய்வத்தமிழ் நீதானப்பா!

(இ. க. வாசுகிநாதன்)

எடுப்பு

ஆறுமுகம் நீயிருக்க யாருமுகம் பார்த்திருப்பேன்
தேறும்வழி சொல்வாயப்பா முருகா! தெய்வத்தமிழ்
நீதானப்பா (ஆறு

தொடுப்பு

ஏறுமயில் மீதிருந்து இன்பவினை யாடல்தந்து
ஆறுபடை வீடுகொண்ட அண்ணலாய் எனையாளும்
(ஆறு

முடிப்பு

தேன்மலர்ச் சிரிப்பெல்லாம் செவ்வாயின் புன்சிரிப்போ!
தெய்வத்திருப் புகழெல்லாம் தேவா உன் எழில்
நடிப்போ!
கான்மலர்ப் பொழிலெல்லாம் கந்தாஉன் குடியிருப்போ!
கவிதைக் கனிகேட்கும் கதிர்வேல் குமரேசா
(ஆறு

குமரி

(தமிழ்ச்செழியன்)

கொல்லாக் குறையை மொழியேற்கக்
கொத்தாக் குறையை விழியேற்க
இல்லாக் குறையை இடையேற்க
இணையாக் குறையை உடலேற்க
எல்லாக் குறையும் குறையாக
ஏற்றுக் குறைந்தாள் குறைந்திட்ட
பொல்லாக் குமரி அவளிந்தப்
புலவர் வாயில் குறைந்தாளா?

அள்ளும் வறுமை அதைவிட்டோம்
அலறும் பசியாம் அதைவிட்டோர்
உள்ளத் துடிப்பின் நிலைவிட்டோம்
உணர்வின் மொழியக் கலைவிட்டோம்
தள்ளும் காலப் பிடிப்பொன்றில்
தவழும் கவிஞர் நாமெல்லாம்
கொள்ளும் பாட்டிற் பலவிட்டோம்
குமரிப் பாட்டை யார்விட்டோம்?

கண்ணே மூக்கே பொன்கொண்ட
காதே முத்தே இசைக்கின்ற
பண்ணே பாட்டே இனிக்கின்ற
பாகே தேனே கைக்கெட்டும்
விண்ணே நிலவே என்றெல்லாம்
விளித்துப் பாடப் பலருள்ளோம்
பெண்ணே உனக்குக் குறையுண்டோ
பேச்சுக் குத்தான் வரையுண்டோ?

———

ஆனந்த நடமாடி...!

(திருச்சி பாரதன்)

ஆனந்த நடமாடி வருக
அழகான மயிலாடி வருக
மானந்த குறத்திமக ளோடு
மனமாட விரைந்தோடி வருக!

வானத்து நிலவுபெண் குளிரை
வழங்கிடவே நலங்காண வருக!
கானத்தில் சிறந்தோங்கும் குயிலும்
கவிபாட எனைநாடி வருக!

தேனொத்த அமுதொத்த தமிழில்
தெவிட்டாத அருள்கூற வருக!
ஞானத்து அழகுத்தேர் இயக்க
நயமான துணையாக வருக!

மோனத்தில் எனையாழ்த்த வருக
முக்திக்கு வழிகாட்ட வருக!
ஏனித்த ரைவாழ்வு விளக்க
எழில்திருவே ரகப்பெருமு! வருக!

THOUGHTS OF A GREAT WRITER

Majestic and free, his proud head raised high, Man marches slowly, yet with firm step, over the dust of old prejudices, alone in a grey mist of errors, the cloud of the past rising behind him and a host of perplexities ahead.

They are numberless as the stars in the unfathomable heavens, and there is no end of Man's journey!

Thus restless Man marches on—onwards and upwards! Ever onwards and upwards!

* * *

Man is the axis of the Universe.

And his vices, you ask, his short-comings?

We all hunger for the love of our fellow creatures, and when one is hungry, even a half-baked loaf tastes sweet.

* * *

"I have come into this world — to disagree".

* * *

And I who do not believe in God, cast a stealthy, almost timid glance at him (at Tolstoy) and said to myself: "This man is like God."

* • *

We cavil at one another so indefatigably because man is the mirror of man.

* * *

Man has made his God omniscient, omnipotent and omnific............has endowed Him with the finest of his own aspirations. God is but a fabrication, born of the drab poverty of life and man's vague urge to make life richer, easier more just and goodly.

• • *

In many respects man is still a brute, but at the same time he is, in the cultural sense, a raw youth as yet, and it is useful to praise and embellish him a little.

* * •

Man is the greatest miracle in the world and the creator of all miracles in the world.

* * *

For me there are no ideas that exist outside of man; for me it is man and only man that is the creator of all ideas; it is he that is a miracle worker and future lord of all Nature's forces. What is most beautiful in this world of ours has been created by man's labour, by his clever hands; all our thoughts and ideas spring from the process of labour – ...I pay homage to Man because I can see in our world nothing but the embodiment of his reason, his imagination and his surmise.

* * *

God is just as much an invention of man's mind as photography is, the difference being that the camera records that which really is, whereas God is in fact a photograph of what man has invented about himself as a being that wishes and is able to be omniscient, omnipotent and absolutely just.

* * *

The only thing I hold sacred is man's dissatisfaction with himself, his striving to become better than he is, I also hold sacred his hatred of all the rubbish that clutters up life and which he himself has brought into being; his desire to put an end to envy, greed, crime disease, wars and all enmity among people in the world; his labour.

* * *

The conflict between man and the gods brought forth the tremendous image of Prometheus, the genius of mankind.

* * *

God is an artistic embodiment of successes in labour.

* * *

Man is the temple of the living God........Nothing better than the man exists on the whole earth......

Man is the only thing that exists; all else is opinion.

I always was and shall be a worshiper of man.

* * *

Philistinism is the bane of the world; it devours personality from within as a maggot destroys fruit... It is a bottomless quagmire that draws into its loathsome depths genius and love, poetry and thought, art and science.

It is due to philistinism that we have come from Prometheus to the hooligan.

* * *

Truth and Wisdom spring from below, from the masses; the upper storeys of life merely breathe exhalatiods coming from below mixed with odours that are alien to that life.

* * *

The history of human labour and creativity is far more interesting and significant than the history of man; man dies before reaching the age of one hundred, whilst his works live through the centuries.

* * *

Freedom of thought is possible only given complete freedom of labour life-activity, never obtained in conditions of capitalist system but only under socialist system.

* * *

Marx alone showed that the basie cause of mankind's tragic life and sufferings has been the rift between clever hands and the clever mind.

Marx has shown us the highway to the working people's radiant future,

Children must learn not only to count and measure, but also to imagine and foresee.

* * *

Capitalism corrupts society like an old man corrupting a young girl to whom he can impregnate with nothing but the diseases of senility.

தமிழ் எழுத்துக்கள்

—[திரு. சா. கணேசன்]—

தமிழ் எழுத்துக்களைப் பற்றிச் சில சிறந்த ஆராய்ச்சிகள் சமீப காலமாக நடைபெற்று வருகின்றன. தமிழ் எழுத்துக்கள் என்று சொல்லும்போது, தமிழ்–பிராம்மி எழுத்துக்களைத்தான் குறிக்கிறேன். இவற்றைப் பிராம்மி, தமிழ்-பிராம்மி என்றெல்லாம் குறிக்கின்றனர். கி. பி. 1903 ல் திரு. வெங்கோபராவ் முதன் முதலில் கீழவளவு என்ற இடத்தில் இவ்வெழுத்தைக் கண்டு வெளியுலகுக்கு அறிவித்தார். அதன் பிறகு, 1906 ல் மறுகால்தலை என்ற இடத்தில் கெமைடு அவர்கள் மற்றொரு கல்வெட்டைக் கண்டுபிடித்தார். அதைப் பின்பற்றி ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல் முதலிய இடங்களில் திரு. எச். கிருஷ்ண சாஸ்திரியும், திரு. கே. வி சுப்பிரமணிய அய்யரும் கண்டுபிடித்தனர். இதற்குப் பிறகு திருச்சி, மாமண்டூர் முதலிய இடங்களிலும் சில கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பல்லவர் வரலாற்றுக்குச் சிறந்த தொண்டு செய்த ஜொவாதுபரே பாண்டிச்சேரிக்கு அருகில், அரிக்கன்மேடு என்று வழங்குகிற, அருகன்மேட்டில் இவ்வெழுத்துக்கள் உள்ள பானை ஓடுகளைக் கண்டுபிடித்தார். அதே இடத்தில் மத்திய தொல்பொருளியல் பிரிவைச்சேர்ந்த டாக்டர் வீலர் அவர்கள் தலைமையில் அகழ்வாராய்ச்சி செய்தபோது, இவ்வெழுத்துக்களுள்ள பானை ஓடுகள் பல கிடைத்தன. அதன் பிறகு, ஈரோட்டின் அருகில் (அறச்சல்லூர் என்று இன்று வழங்குகின்ற) அறச்சாலையூரில் உள்ள ஒரு கல்வெட்டை திரு. செ. ராஜு கண்டு வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தினார். இதன்பிறகு, அளகரையிலும், உறையூரிலும் சென்னைப் பல்கலைக்கழகம், திரு. டி. வி. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் அகழ்வாரர்ய்ச்சி நடத்தியபோது, இவ்வகை எழுத்துக்களுள்ள பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இந்த ஆண்டு திரு. ஐ. மகாதேவன், மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த ஊராகிய திருவாதவூரில் மற்றொரு கல்வெட்டைக் கண்டறிவித்திருக்கிறார்.

முதன் முதலில் இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்த அறிஞர்கள், இது புரியாத வரிவடிவில் உள்ளது என்று கருதினர் “இவை யனைத்தும், தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டவையே; தமிழ் எழுத்தின் சிறப்பெழுத்துக்களான ழ, ள, ற, ன முதலிய எழுத்துக்கள் இவற்றில் உள்ளன” என்று, சில கல்வெட்டுக்களைப் படித்து முதன் முதலில் புலப்படுத்திய பெரியார் திரு. கே வி. சுப்பிரமணிய அய்யரே யாவார். கி. பி. 1924-ம் ஆண்டிலேயே இப்பணியால் திரு. சுப்பிரமணிய அய்யர் தமிழகத்துக்கு அரும்தொண்டு செய்துள்ளார். எனினும், பல கல்வெட்டுக்கள் பொருள் சிறக்க வாசிக்கப்படாமலே இருந்து வந்தன. ஆனால், பட்டிப்ரோலு முறையைப் பயன்படுத்தி இக்கல்வெட்டுக்கள் விளக்கம்பெறச் செய்த பெருமை திரு. ஐ. மகாதேவனையே சாரும்.

இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்தவர்களைப் பற்றிக் குறிக்கும்போது நாம் பிரின்ஸப் அவர்களை மறந்துவிடக் கூடாது. அசோகரது பிராம்மி எழுத்துக்களை ஆராய்ந்து, அந்தந்த எழுத்துக்களுக்கும் ஒலிகளை நிச்சயித்த பெருமை பிரின்ஸப் அவர்களையே சாரும். அந்த முறையில் அடுத்துச் சிறந்த தொண்டாற்றிய மேதை ப்யூலர் அவர்களாகும். ப்யூலர் அவர்கள் பட்டிப்புரோலுவில் கிடைத்த கல்வெட்டுக்களைச் சிறப்பாக ஆராய்ந்திருக்கிறார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பண்டைக் கல்வெட்டுகளைச் செம்மையாக ஆராய்ந்த அறிஞர் திரு. கே. வி. சுப்ரமணிய அய்யரே ஆவார். பழுத்த பழமாக இன்று கோயம்புத்தூரில் வாழ்ந்து வருகிற திரு. அய்யர் அவர்கள் பல கல்வெட்டுக்களை ஆராய்ந்திருக்கிறார். சங்க கால மன்னர்கள் கல்வெட்டில் குறிக்கப்படுகிறார்களா, இல்லையா? என்று ஒரு முக்கிய கேள்விக்கு ‘ஆம்’ என்று விடை தந்தவர் திரு. ஐ. மகாதேவனே. “புகழூரிலும், மாங்குளத்திலும், சேரமன்னர்களும், பாண்டிய மன்னர்களும் குறிக்கப்படுகின்றனர்” என்று, கல்வெட்டுக்கும், சங்க இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பை ஒருவாறு வெளிப்படுத்தியவர் திரு. மகாதேவனே. பெருவாரியான கல்வெட்டுக்களை, திரு. ஐ. மகாதேவன் பொருள் சிறக்க வாசித்துள்ளார். ஒரு சில எழுத்துக்களில் அல்லது வார்த்தைகளில் கருத்து வேற்றுமை ஏற்படலாமே தவிர அனேகமாக எல்லாக் கல்வெட்டுக்களுக்கும் திரு. ஐ. மகாதேவன் பொருள் புலப்படச் செய்துள்ள அருமைப் பாட்டைப் பாராட்டாமலிருக்க முடியாது.

இந்த வகை எழுத்துக்களை இதுகாறும் ஆராய்ந்த பெரியோர்கள்
‘தமிழ் நாட்டில் உள்ள பிராம்மி எழு
துக்கள்’ என்றே குறிப்பிட்டுவந்தன
திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இ
வெழுத்தை ‘தமிழ்–பிராம்மி’ என்
குறிக்கிறார். பிராம்மி என்ற சொ
லுக்கு “எழுத்து” என்பதே பொரு
எனவே, தமிழ்-பிராம்மி என்று
தமிழ் எழுத்து என்பது தா
பொருள்? இக்கல்வெட்டுகள் பெரு
பாலும் சமணப் பெரியார்களுக்கு ஏ
படுத்திய படுக்கைகளையே குறிக்கி
றன என்பதையும் இச்சந்தர்ப்பத்தி
நாம் மறந்துவிடப்படாது. இக்குகை
தளங்கள், சமணர்களது இருக்கை
களா? அல்லது பௌத்தர்கள
இருக்கைகளா? இதிலும் கருத்
வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது
ஆனால் கிட்டத்தட்ட அனைத்துமே
முனிவர்களது இருக்கைகள் தா
இவை வெறும் படுக்கைகள் அல்
தவம் புரி தலம் எனக் கருதல் சரியா
இருக்கலாம். சமண சமயத்தின
ரிஷப தேவருக்கு இரண்டு மகள்க
என்றும், ஒருத்தி பெயர் சுந்தரி எ
றும் மற்றவள் பெயர் பிராம்மி எ
றும் கூறுகிறார்கள். சுந்தரி என்பது
மொழியையும் பிராம்மி என்பது எழு
தையும் குறிப்பதாகவும், இது பாக
தம் ஐந்தாம் சருக்கத்தில் விளக்க
படுவதாகவும் கூறுகிறார்கள். எனவே
பிராம்மி என்றால் எழுத்து (sript
என்றுதான் பொருள்கொள்ள வேண்
டும். இந்தியாவின் வட பகுதியில்
அசோகன் கல்வெட்டுக்கள் அனை
தும் இரண்டு எழுத்துக்களில் உள்
ளன. அசோகன் கல்வெட்டில் அவ
றிற்கு ‘தர்ம லிபி’ என்று பெயர் கூறப்
பட்டாலும் அவை பிராம்மி என்
எழுத்து வகையிலும் கரகோஷ்டி
என்ற எழுத்து வகையிலும் அடங்கிய
வையே எனக் கணிக்கப்பட்டிருப்
பதை நாம் அறிவோம். இடமிருந்து
வலமாகவும், வலமிருந்து இடமாகவும்
எழுதப்படும் அவ்வெழுத்துக்களை
முறையே ‘பிராம்மி’ என்றும்
‘கரோஷ்டி’ என்றும் சமண சூத்திரங்
கள் பெயர் குறிக்கின்றன. லலித
விஸ்தாரம் என்னும் பௌத்த நூலும்
அப்படியே குறிக்கிறது. இரண்டுமே
மிகப் பழைய நூலாகும். அவற்றுள்
மிகவும் பழமையானது சமண
சூத்திரங்களே என்பர். அதில் 18 வித
எழுத்துக்களின் பெயர்கள் குறிக்கப்
பட்டுள்ளன. பிராம்மி என்ற பெயரும்,
கரோஷ்டி என்ற பெயரும் அவற்றில்
இரு பெயர்கள் ஆகும். மற்றொரு
பெயர் தாமிழி என்பதாகும். அச்சூத்
திரங்களில் பதினெட்டு வித எழுத்துக்
களைக் குறிப்பிடுவதிலிருந்து 18 வித
எழுத்துக்களும் அக்காலத்தில் இந்தி
யாவில் வழக்கத்திலிருந்தன என்றே
கருதவேண்டும். இதுகாறும் கிடைத்
துள்ள கல்வெட்டுக்களைப் பார்த்தால்,
பிராம்மி, கரோஷ்டி இரண்டையும்
அல்லாமல் வேறு எழுத்துக்களும் அல்
லது முறைகளும் இருந்தன என்பது

...ன்கு புலப்படும். பட்டிப்புரோலுவில் ...ணும் எழுத்துக்களுக்கும், தமிழகத்தில் உள்ள எழுத்துக்களுக்கும் சில வேறுபாடுகள் இருப்பினும் பலவகையில் ஒற்றுமை காணப்படுகிறது. அதனால் பிராம்மி, கரோஷ்டி என்ற எழுத்துக்களைத் தவிரப் பிற வகை எழுத்துக்களும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தன என்று நிச்சயமாக அறிகிறோம். எனவே, தமிழகத்தில் உள்ள எழுத்துக்களைப் 'பிராம்மி' என்று அழைத்தல் சரியா என்பது சிந்திக்கத் தக்கதாகும். ''சமண சூத்திரங்களில் காணப்படுவதுபோலத் 'தாமிழி' என்ற பெயர்தான் பொருத்தமானது'' என்று என்று திரு. ஆர். நாகசாமி கருதுகிறார். தமிழகத்தில் வழங்கிய எழுத்துக்கு தமிழரல்லாதவர்கள் அவர்கள் மொழிமரபுக் கேற்பத் ''தாமிழி'' என்று பெயர் கூறலாம்; ஆனால் நாம் நம் மரபுக்கேற்ப, 'தமிழ் எழுத்து' என்று கூறுவதுதான் பொருத்தம் என்பதே என் அழுத்தமான கருத்து. பட்டிப்ரோலு எழுத்து, பிராம்மி எழுத்திலிருந்தும், தமிழ் எழுத்திலிருந்தும் சில வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. உதாரணமாக 'ம' என்ற உயிர்மெய் எழுத்துத் தலைகீழாகக் காணப்படுவதுடன் 'ஆ' உயிர் ஏற்ற உயிர்மெய் எழுத்துக்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இதிலிருந்து சமண நூல்களில் குறிப்பிட்ட பெயர்கள் அந்நாளில் வழங்கி வந்த எழுத்துக்களின் பெயர்களே என்பதில் ஐயமில்லை. எனவே பல்வேறு பகுதிகளில் வழங்கிய எழுத்துக்களைச் சமண நூல்களில் குறிப்பிட்டுள்ள பெயர்களால் குறிப்பதே சரியாக இருக்கும் என்பது என் கருத்து. இந்த அடிப்படையில் தமிழ் நாட்டில் காணப்படும் பண்டைய எழுத்துக்களைத் 'தாமிழி' என்று திரு. நாகசாமி குறிப்பிடுவது சரியே என்பதுதான் என் கருத்து. பௌத்த நூலான 'லலித விஸ்தாரம்' என்ற நூல் 64 வகை எழுத்துக்களை குறிக்கிறது. தமிழ் எழுத்துக்களைக் அது ''திராமிளி'' என்று பேசுகிறது. திராவிட தேசத்தில் வழங்கிய எழுத்து என்ற பொருளில் ''திராமிளி'' என்ற பெயரிடப்பட்டது எனக்கொள்ளலாம். இதையே 'திராவிடி' என்றும் சிலர் குறிப்பர். திராவிடம் என்று நாம் இப்போது சிறப்பாக, தமிழ், தெலுங்கு. கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளையுமே குறிக்கிறோம்: இந்த நான்கு மொழிகளும் ஒன்றாக இருந்த காலத்தில் வழங்கிய எழுத்துக்களையே 'திராவிடி' என்று குறிக்கப்படுகிறது என்றும் கொள்ளலாம்.

இவற்றால் நாம் அறியும் பேருண்மை கிறிஸ்துவாப்தத்துக்கு முன்பும், கிறிஸ்துவுக்குப் பின்னால் சுமார் முன்னூறு ஆண்டுகள் வரையும், இந்தியாவில் வழங்கிய மொழிகள் இரண்டே. ஒன்று பிராகிருதம். மற்றது தமிழ். வடமொழி-தென் தமிழ் என்ற இரு மொழிப் பெயர்களே பழ நூல்களில் காணப்படுகின்றன. இந்தியாவின் வட பகுதி மிகப் பரந்த நிலமாகையால், பிராகிருதம், பிரதேசத்துக்கு ஒப்ப, கௌடி, பாஞ்சாலி, மாகதி, சூரசேனி, மைதிலி, அவதி, மகாராஷ்டரீ என்பன போன்ற பல பெயர்களுடனும் சிற்சில வேற்றுமைகளுடனும் தொடங்கிக் காலப் போக்கில் பல மொழிகளாகப் பிரிந்து வளர்ந்தது. தமிழ் நாட்டில் தமிழ் சிறந்து விளங்கிற்று. தமிழகமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்தந்தப் பகுதிகளிலும் மொழி வழக்கில் சில வேறுபாடுகள் இருக்கத்தான் இருந்தன. இன்றும்கூட இருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு வடக்கே வாழ்ந்தவர்கள் நம்முடைய மொழியைத் தாமிழம் என்றே குறித்தனர். பிராகிருத மொழியில் 'ழ' இல்லாததால் அதைத் 'தாமிளம்' என்றே வழங்கினர். இதையே சிலர் திராமிளம், திராமிடம், திராவிடம், என்றெல்லாம் குறிப்பர், இவ்வாறு அவர்கள் குறிப்பது தவறு என்று நாம் கூறக்கூடாது, அது அவர்கள் மொழி மரபு. தெலுங்கு மொழியை நாமும் 'வடுகு' என்று குறித்தோமில்லையா? பல பகுதியில் வாழும் மக்கள் அவரவர் மொழி மரபுக்கு ஒப்பச் சொற்களை அமைத்து உச்சரிப்பது முறையே. ஆதலால், அக்காலத்தில் அவர்கள் 'திராமிடம்' என்றது தமிழையே குறிக்கும். சங்க காலம் என்பது கிறிஸ்தவாப்தத்தின் தொடக்கம் வரை நிலவிய காலம் எனலாம். அக்காலத்தே நிலவிய இரு பெரும் நாகரிகங்கள் பிராகிருத நாகரிகமும், தமிழ் நாகரிகமுமே எனலாம். எனவே, தமிழ் மொழியை அக்காலத்தே எழுத உபயோகித்த எழுத்திற்குத் 'தாமிழி' என்று வடமொழியில் அழைத்தது நியாயமே.

உண்மையாகப் பார்க்கப்போனால் அதைத் 'தமிழ்' என்றே குறிக்கவேண்டும். தமிழ் என்றால் பலருக்குத் தற்காலத்தில் உள்ள தமிழ் வரி வடிவே கருத்தில் உதிக்கும். கி. பி. 6-ம் நூற்றாண்டிலிருந்து தமிழ் மொழியை எழுத இரண்டு எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டன. ஒன்று தமிழ்; மற்றது வட்டெழுத்து. அதே காலத்தில் தமிழகத்தில் சம்ஸ்கிருதத்தை எழுதக் கிரந்த எழுத்து உபயோகிக்கப்பட்டது இம்மூன்று எழுத்துக்களும் முந்திய பழந்தமிழ் எழுத்துக்களிலிருந்தே தோன்றியவை என்பது தெளிவாகப் புலப்படுகின்றன. எனவே, தமிழ் எழுத்து, வட்டெழுத்து, கிரந்த எழுத்து ஆகிய மூன்றும் தமிழ் நாட்டில் வழங்கிய எழுத்துக்கள். அனைத்திற்கும் தாய்மொழியாக விளங்குவதால் இதைப் பழம்பெருமை வாய்ந்ததும் பிறமொழியாளரால் பெயர் சூட்டப்பட்டதுமான 'தாமிழி' என்ற சிறப்புச் சொல்லால் குறிப்பது குழப்பமில்லாமலிருப்பதற்கு உதவும். இந்தியா என்று பிறர் எவரோ தந்த பெயராலன்றோ நம் நாட்டை உலகவர் இன்றறிகின்றனர். நாமும் அதை மாற்ற விரும்பவில்லையன்றோ?

திரு. ஐ. மகாதேவன் அவர்களின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டுபார்க்கும்போது வேறு சில உண்மைகளும் புலப்படலாம். ஒன்று தொல்காப்பியத்தின் காலம். தொல்காப்பியம் 'அ' முதல் 'ஔ' ஈறாக உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு எனத் தெளிவாகக் குறிக்கும். தொல்காப்பியர் காலத்திற்கு முன், குறில் ஐந்தும்' நெடில் ஐந்துமே இந்தன என்றும் இணை உயிர் இரண்டு கூட்டி (அ+இ=ஐ எனவும் அ+ஊ=ஔ எனவும் ஆக்கி) நெடில் ஏழெனத் தொல்காப்பியர் இலக்கணம் செய்தார் என்றும் சில ஆராய்ச்சியாளர் கருதுவர். மிகப் பழைய கல்வெட்டுக்களில் 'ஐ' 'ஔ' ஆகிய இரு எழுத்துக்களும் காணப்படவில்லை. எனவே இக்கல்வெட்டுக்கள் தொல்காப்பிய காலத்துக்கு முற்பட்டவை என்று தோன்றுகிறது.

இங்கு முக்கியமாக இரண்டெழுத்துக்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். சுமார் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பே 'ஐ', என்ற எழுத்தும் 'ஔ' என்ற எழுத்தும் கூட்டெழுத்துக்களே என்பதைப்பற்றிய எழுத்துரையை மதுரை மாநாட்டில் சமர்ப்பித்துள்ளேன். தாமிழி எழுத்துக்களில் 'எ' கர உயிர்மெய் எழுத்தைக் குறிக்க அகர உயிர் மெய்யெழுத்தின் தலையில் இடப்புறம் ஒரு கோடிட்டுக் காண்பிக்கப்படுகிறது. அங்கேயே இரண்டு கோடிட்ட மெய்யெழுத்துக்களை 'ஐ' கார ஒலியாகக்கொண்டு கை, சை என்று வாசிக்கின்றனர். அதன்படி மேலே இடப்புறத்து ஒரு கோடிட்ட எழுத்து 'எ' கரமாகவும், இரண்டு கோடிட்ட எழுத்து ஐகாரமாகவும் கொள்ளவேண்டும் என்கிறார்கள். அங்ஙனம் கொண்டால் 'ஏ' காரத்திற்குக் குறியேதுமின்றிப்போகிறது. எனவேதான், எகர, ஏகாரம் இரண்டையுமே ஒரு கோடிட்ட எழுத்தே குறிக்கும் என்று சொல்வர். இங்கு நாம் ஒன்றை மறந்துவிடப்படாது. தாமிழி' எழுத்துக்களில் குறிலைக் குறிக்க ஒரு கோடும் நெடிலைக் குறிக்க இரண்டு கோடுகளும் போடப்படுகின்றன. க, கா, கி, கீ, கு, கூ என்ற எழுத்துக்களில் இந்த வரம்பையே காண்கிறோம். எனவே,

9-ஆம் பக்கம் பார்க்க

எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

5. பேத்தணன் தளவாய்

[கி. முத்துராமகிருஷ்ணன்]

எட்டயபுரம் ஒரு பழம் பதி. இங்கு பலதரத்து மக்கள் வாழ்ந்தார்கள். வாழ்கிறார்கள் என்றாலும் அரண்மனையை அண்டி வாழ்ந்த சமூகம் பரிவார குலம் என்பதாகும். பரிவார குலம் இன்று மணியகாரார் சமூகம் என்ற பெயரில் வாழ்ந்து வருகிறார்கள்.

பரிவார குலத்தில் உதித்த புலவர்தான் பெத்தணன் தளவாய் என்பவராகும். இவர் சாத்தூரப்பன் தளவாய் – முத்தம்மாள் என்ற தம்பதிகளுக்கு ஒரே மகனாகப் பிறந்து வாழ்ந்தார். தளவாய், கடிகையாரின் சீடர். தளவாய் என்பது பரிவார குலத்தின் தலைவராவர். இவர் முன்னாள் அரசருக்கு பட்டம் கட்டி வைக்கும் உரிமை உடையவர். இவருக்கு சமூகக் கூட்டங்களில் முதல் மரியாதையும் உண்டு.

முதல் உரிமை, முதல் மரியாதை உடைய குலத்து தளவாய் படிப்பிலும் கவி புனைவதிலும் வல்லுனராகவே விளங்கினார்.

பெத்தணன் தளவாய் அவர்களது திறமையைப் பாராட்டி நாகூர் முத்துப் புலவர் அவர்கள் தமிழ்த் தளவாய் நீ வாழ்க என்று கண்ணி பாடி உள்ளார். இதன் முழுக்கவி இப்பொழுது கிடைக்கவில்லை.

தளவாய் அவர்கள் எட்டயபுரம் அரசர்மீது உலாமடல் என்ற பெரும் பாடல் பாடி உள்ளார். இதன் பிரதி ஒன்று நான் தமிழ்க்களஞ்சியத்தைச் சேர்ந்த நண்பர் பெரியசாமி தூரன் அவர்களுக்கு 1948ம் ஆண்டில் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தேன். அவர்கள் அதனை புதிய வடிவில் உரையுடன் எழுதினால் தமிழ் மக்கள் படித்து பயன் அடைவார்கள் என்ற விவரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தளவாய் வேறு பல சமயம் சில கவிகள் பாடி இருக்கிறார் என்றாலும் நமக்குத் தற்சமயம் கிடைத்தது ஒரே ஒரு பாடல்தான்.

ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கூறுவதுபோல் ஒரு கவிக்கு நாம் ஆயிரம் ஆண்டு காத்திருக்கலாமே என்றபடி நானும் இக்கவிதையை தமிழ் மக்களுக்குத் தருகிறேன்.

எட்டயபுரம் சமீனைச் சேர்ந்தது குருமலை. இங்கு பல மகான்கள் வாழ்ந்தனர். பல மூலிகைகள் உண்டு. மான்களும், முயல்களும் உண்டு. மன்னர் ஆண்டில் பலதடவை வேட்டையாடச் செல்ல தனது படை பரிவாரங்களுடன் செல்வது வழக்கம்.

ஓர் ஆடி மாதம். மன்னர் வேட்டைக்குச் சென்றார். மலையில் ஒரு சரிவான பகுதி. அங்கு மன்னரும் மற்றோரும் இருக்க ஒழிவு கட்டி உள்ளது. ஏவலாளர்கள் தம்பம் பட்டம் பறை அடித்து மான் முயல் காட்டுப் பன்றியைக் கலவை கலைக்கிறார்கள். மான்கள் மருண்டு துள்ளித் துள்ளி ஓடி வருகின்றன. புள்ளினங்கள் பறை ஒலி கேட்டு பதறிச் சிறகடித்து பறக்கின்றன. அத்துடன் முயல் நரியும் ஓடுகின்றன. கடைசியாக கறுப்பான ஓர் தடித்த உருவம் ஓடுகிறது. ஆம் அது ஒரு காட்டுப் பன்றியாகும்.

காட்டுப்பன்றி வாட்டசாட்டமாக உள்ளது. இருள் போன்ற கருத்த பயங்கர உருவம். மூக்கின் பக்கத்தில் சிறிய கூரிய கொம்புகள் உள்ளன. இதனைக் கண்டான் ஒரு பரிவார வீரன். குறி தவறாமல் சுடுவதில் தீரன். எடுத்தான் தன் துப்பாக்கியை. தொடுத்தான் ஒரு தோட்டாவை. சுட்டான் பன்றியை. செத்து வீழ்ந்தது பன்றி நிலத்தின் மீது. இரத்தம் கொட்டியது. இதனைக் கண்ட மன்னர் வெகுண்டார். கோபம் கொண்டார் நாம் சுடுவதாக இருந்த பன்றியை பரிவார வீரன் சுட்டுவிட்டானே என்று.

நல்ல வேளையாக பெத்தணன் தளவாய் அந்த ஒழிவில் மன்னர் பக்கலில் இருந்தார். நிகழ்ச்சியை பாட்டாக மாற்றினார். மன்னா, மனக் கோபம் கொள்ளற்க. வருத்தம் வேண்டாம். நம் காளை இதனை செய்து முடித்துவிட்டது. வேந்தே மயங்காதே என்று பாடினார்.

மனத்தில் வருத்தம் வைத்த மன்னா
[வெங்கடேசஎட்டா
இனத்தில் ஒருவன் பன்றி சுட்டால் ஈனமா—
[வனத்திலே
நின்று மயங்காதே நீள்முடிவேந்தே
கொன்று முடித்தது காளை.

பாட்டைக்கேட்ட மன்னர் மகிழ்ந்தார். பன்றி சுட்ட காளையும் தண்டனையில் இருந்து தப்பியது. மன்னரும் புலவரும் மற்றோரும் வேட்டையை முடித்துக்கொண்டு இளசை திரும்பினார்கள்.

தமிழ் தளவாய் அவர்கள் மன்னருடன் பலகாலம் இருந்துவந்தனர். அதன் பின்பு பிச்சாண்டிப் புலவர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் பற்றிய வரலாறு அடுத்து வரும்.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலிடப் புறத்தில் இரண்டு கோடுகளுடன் கூடிய உயிர் மெய்யெழுத்துக்களை மட்டும் ஏன் ஐகாரமாகக் கொள்ளவேண்டும்? க, கா, என்றும் கி, கீ, என்றும் கு, கூ என்றும் வருவதுபோல் ஒரு கோடு குறிலையும், இரண்டு கோடுகள் நெடிலையும் குறிக்கும் என்று கொள்வதே பொருந்தும் என்று நான் கருதுகிறேன். திரு. நாகசாமியும் இங்ஙனமே கருதுகிறார். குறில் எழுத்துடன் ஒரு கோடு அதிகம் இட்டால் அதே நெடிலாக ஆகும் என்பதை க. கி. கு. கெ. கொ ஆகிய ஐந்திற்கும் பொது நெறியாக அமைந்திருந்ததெனக் கொள்வதே சரி. எனவே எகரமும், ஏகாரமும் முறையே ஒரு கோட்டாலும், இரண்டு கோட்டாலும் குறிக்கப்படுகின்றன. 'ஐ' என்பது 'அஇ' அல்லது 'அய்' என்ற இரண்டு எழுத்துக்களைக்கொண்டதே. அது தனி ஒலியாகுமா, குறில் இன்றியே நெடில் வரலாமா என்பனவெல்லாம் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே, முதன்தலில் அது தனி உயிர் எழுத்தாகக் கொள்ளப்படவில்லை. தொடக்கத்தில் 'அஇ' என்று இருந்து பின்னர் ஒலி கருதி 'அய்' ஆகியிருக்க வேண்டும். பிற்காலத்திலேதான் 'ஐ'

ஓர் உயிரெழுத்தாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பது என் கருத்து. 'ஐ'-யின் உருவே என் கருத்துக்கு அரண் செய்கிறது. 'ஐ' எழுத்தின் கீழ்பகுதியில் உள்ளது யகரமாகும். மேல் பகுதியில் உள்ளது 'அ' கரமாகும். இது தமிழர்கள் கிரந்த எழுத்தை எழுதும் மரபை ஒட்டியுள்தும் நோக்கத்தக்கதாகும். எழுத்தின் வளர்ச்சியை முறையாக அடுக்கி வைத்துக்கொண்டு ஆய்வோமாளுல் இவ்வுண்மை ஐயத்திற்கு இடமின்றிப் புலப்படும். எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியதாகக் கருதப்படும் "தாமிழி" கல்வெட்டுக்களில் தலையினிடபால் இரண்டு கோடிட்ட எழுத்துக்களை 'ஏ' என்ற வாசித்தல் வேண்டும். அதே போன்று 'ஔ' என்ற எழுத்தும் அ+வ், அல்லது அ+உ, அல்லது அ+ஊ ஆகிய இரண்டு எழுத்துக்கள் இணைந்ததே. இதுவும் தனி உயிரெழுத்தல்ல. வரி வடிவத்தை ஆய்ந்தால் 'அ', 'ஊ' இரண்டும் சேர்ந்தும் 'ஔ' ஆயிற்று என்பது தெளிவாகும்.

ஐயும், ஔவும் ஆகிய இரண்டு உயிரெழுத்துக்களும் 'தாமிழி' எழுத்துக்களில் காணப்படவில்லை. எனவே, தாமிழி எழுத்துக்கள் தொல்காப்பியத்திற்கு முந்தியவை; தொல்காப்பியம் அவற்றுக்குப் பிந்தியது என்பது தெளிவு இம்முடிவுக்கு வர மற்ருெரு முக்கிய காரணமும் உண்டு. தொல்காப்பியத்தில் "மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்" என்று, மெய்யெழுத்துக்கள் புள்ளியோடே வரும் எனக் குறிக்கப்படுகிறது. தாமிழிக் கல்வெட்டுக்களில் மெய்யைக் குறிக்கப் புள்ளி கிடையாது. புள்ளி இல்லாத வரி வடிவே மெய்யைக் குறிக்கிறது. இக்காரணத்தைக்கொண்டு பார்த்தாலும் இக்கல்வெட்டுத் தொல்காப்பியத்திற்கு முந்தியதே என்பது புலனுகும். இச்சந்தர்ப்பத்தில் மற்றொன்றையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். அறச்சாலையூரில் உள்ள கல்வெட்டிலேதான் முதன்முதலாகப் புள்ளி காணப்படுகிறது. அதே போன்று புகழூரில் உள்ள கல்வெட்டுக்கள் சிலவற்றில் புள்ளி காணப்படுகிறது. அங்ஙனமாயின் அறச்சாலையூர், புகழூர் கல்வெட்டுக் காலத்தைத் தொல்காப்பியத்திற்கு சிறிது முந்தியதாகவோ அல்லது ஒட்டியதாகவோ அல்லது சற்றுப் பிந்தியதாகவோ கொள்ளலாம்.

அறச்சாலையூரில் உள்ள கல்வெட்டு எக்காலத்தைச் சார்ந்தது என்பது ஒரு பயன் தரும் கேள்வியாகும். அறச்சாலையூர்க் கல்வெட்டு கி. பி. 2ம் நூற்றுண்டைச் சார்ந்தது என்று திரு. டி. என். ராமச்சந்திரன் அவர்களும் திரு. டி. வி. மகாலிங்கம் அவர்களும் கருதுகிருர்கள். 3 அல்லது 4ம் நூற்றுண்டைச் சார்ந்தது என்று திரு. ஐ. மகாதேவன் கருதுகிருர். இங்கு நாம் ஒன்றைக கவனத்தில் கொள்ளவேண்டும். சமணமுனிவர்கள் முதன்முதலில் இந்தியாவின் வடபகுதியிலிருந்து தென்னகத்துக்கு வந்தவர்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. எனவே, அவர்களது வாழ்விலும், நூல்களிலும், எழுத்துக்களிலும் அப்பகுதிகளில் நிலவிய பண்பாட்டுக் கூறுகள் காணப்படும் என்பதில் ஐயமில்லை. எனவேதான், சில பிராகிருதச் சொற்களை இக்கல்வெட்டுக்களில் காண்கிறோம். சமண சமயத்தைச் சார்ந்த பல கல்வெட்டுக்கள் இந்தியாவின் வடபகுதியில் கிடைத்துள்ளன. குறிப்பாக 'மதுரா' என்ற இடத்தில் கி. மு. முதல் நூற்றுண்டைச் சார்ந்த பல கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவை 'ஆயாகபடம்' என்ற சிற்பங்களை, ஆருகத வழிபாட்டிற்காகச் செய்தளித்த செய்தியைக் குறிக்கின்றன. அவற்றில் மகாக்ஷத்ரபர்களின் ஆண்டு குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த எழுத்துக்களையும், நாகார்ஜுன கொண்டா, அமராவதி ஆகிய இடங்களில் கிடைத்துள்ள சாதவாகனர்களின், கி. பி. முதல் நூற்றுண்டுக் கல்வெட்டுக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அறச்சாலையூர்க் கல்வெட்டை, கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டைச் சார்ந்ததாகவே கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் பாப்போமாளுல் தொல்காப்பியம் கிறிஸ்தவாப்தத்தின் சம காலத்தது என்று சொல்லவேண்டும். இம்முடிவை ஏற்றுக்கொண்டால் புகழூர்-இரும்பொறைக் கல்வெட்டுக்கள் கி. மு. முதல் நூற்றுண்டைச் சார்ந்தவை எனக் கொள்ளலாம். அங்ஙனமாயின், மாங்குளம் வழுதியின் கல்வெட்டைக் கி. மு. 4, 5-ம் நூற்றுண்டுகளுக்கு முன்னரேயே (எத்துணைக்காலத்திற்கு முன்னர் என்று கூற முடியாது) தமிழகத்தில் எழுத்துக்கள் வழக்கத்திலிருந்தன என்று உறுதியாகக் கூறலாம். எது எவ்விதமாயினும், இப்போது தமிழகத்தில் அறிஞர்கள் வஞ்ஞான நெறியில் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி பல அரும்பெரும் உண்மைகளைப் புலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

[இது, 1966 அக்டோபர் 8, 9 தேதிகளில், சென்னையில் நடைபெற்ற கல்வெட்டுக் கருத்தரங்கில் பேசியதன் சாரமாகும்.]

—பேராசிரியர் அ. சீ. ரா.
மணிவிழா மலர்.

தாயாய் எதற்கடி நீயானுய்

(டி. எஸ். சுப்பராமன்)

ஏழை விழியினில் வாளானுய் – பிரிந்து
இணைவோர் விழியில் இன்பானுய் – புண்
கோழை விழியில் குடியானுய் – ஒரு
கோயில் இறைமுன் அருளானுய்.

நடிகன் விழியினில் பொய்யானுய் – இல்
நாயகி வாழ்வில் செலவானுய் – தாய்
மடியுள சேய்க்கு மொழியானுய் – நல்ல
மாணவன் கொள்கையில் வாழ்வானுய்.

பிரிவோர் விழியில் மருந்தானுய் – கொடும்
பிணியோர் விழியில் உறவானுய் – ஆயின்
தரியா எனதுளக் கண்ணீரே ! – என்றன்
தாயாய் எதற்கடி நீயானுய் !

"எழுத்தாளன்"
(மாத இதழ்)

ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.

விபரங்களுக்கு : நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு.
திருச்சி-2,

உலக நாடக விழா

31-3-68 ஞாயிற்றுக்கிழமை வழக்கம்போல் திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம், ''உலக நாடகவிழா''வை சிறப்பாக கொண்டாடியது. விழா திருச்சித் தமிழ்ச் சங்க கட்டிடத்தில் ஜமால் முகமது கல்லூரி பேராசிரியரும் நமது சங்க துணைத் தலைவருமான உயர்திரு G. S. கமலபதி M. A. அவர்கள் தலைமையில் திருச்சி ஈ. வே. ரா. கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர் திரு. செல்லப்பன் எம். ஏ., அவர்கள் ''நாடகத் தத்துவம்'' என்ற பொருள் பற்றியும், திருச்சி குமரி தனிப்பயிற்சிக் கல்லூரி பேராசிரியர் திரு M. S. நாடார் எம். ஏ., அவர்கள் ''நாடகத் தோற்றமும் வளர்ச்சியும்'' என்பது பற்றியும், திருச்சி வானொலி நிலைய நாடகத்துறை அமைப்பாளர் திரு கோவிந்தராஜ் எம். ஏ., அவர்கள் ''நாடகத்தில் நவீனம்'' என்பதையும் மிகச் சிறப்பாக சொற்பொழிவாற்றினார்கள்.

இறை வணக்கத்துக்குப்பின் நமது சங்கத் தலைவர் திரு, ரெட்டியார் அவர்கள் விழாவில் கலந்துகொள்ளும் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதற்குப்பின் விழாத் தலைவர் அவர்கள் தன் முன்னுரையில் உலகிலே நாடகம் முன்னேற்றமடைந்துள்ளது. அதைவிட சிறப்பு இக்காலத்தில் நமது நாடடில் பல மாநிலங்களில் நாடகத் துறையில் மிகுந்த முன்னேற்றமும் மக்கள் அதை ரசிக்கும் தன்மையும் உயர்ந்துள்ளது. நாடகத்தில் உள்ள ஆர்வத்தாலும், ஆசையாலும் அந்த நிலையில் நடகத்தைப்பற்றி பேசுவது நினைப்பது, நடிப்பது என்ற நிலையில் நான் இருக்கிறேன் என்று கூறி அரங்கநிர்மாணத்தில் ஒளி, ஒலி, திரை மேடை எவ்வளவுதூரம் இக்காலத்தில் முன்னேற்றமடைந்துள்ளது. நான் பூரிப்பால் இந்த விழாவிற்குத் தலைமை தாங்க பெரு மகிழ்வு எய்துகிறேன் என்று கூறி முதலில் செல்லப்பன் அவர்களை 'நாடகத் தத்துவம்' என்பதனைப்பற்றி பேசும்படி கேட்டுக் கொண்டார். உடல் நலம் சரியில்லாத நிலையிலும் பேராசிரியர் செல்லப்பன் அவர்கள் 'உலகம் நாடகமே' ஆனால் ப்ளேட்டோ என்பவன் நாடகத்தை மாயம், ஏமாற்று வித்தை என்று கூறுகிறான். அரிஸ்டாடில் அது அல்ல. வாழ்க்கைச் சாற்றைப் பிழிந்தெழுகின்ற சாறு என்றும், நாடகம் – நிழல். அது நிழலைக் காட்டும் நிழலல்ல. ஒளிந்து கொண்டுள்ள வாழ்க்கை நிலையில் நாடகம் உண்மையைக் காட்டுகிறது. வார்த்தையை உயிருள்ள நிலையில் உயிராகவே காண்பிக்கிறது. சிற்பி சிலையை செதுக்குவதுபோல். உதாரணமாக இசைக்கு கோவலனும், இயலுக்கு கண்ணகியும், நாடகத்திற்கு மாதவியும் என்பது ஒரு நிலையை காட்டுகிறது. நாடகத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அது நடிப்பவர் நடிப்பது மட்டுமல்ல, பார்ப்பவரையும் மனதால் நடிக்க வைப்பது நாடகம். இது நாடகத்தின் சிதறல் மட்டுமல்ல அதில் முழுமையும் இருக்கிறது,

நாடகம் என்பது வார்த்தையின் சாறு. அதை வாழ்க்கையாக நினைவுபடுத்தி பார்க்கவேண்டும். உலகியலில் வாழ்வின் ஒதுக்கிய பகுதிகளை காட்டுகிறது நாம் சிலமணிநேரம் பார்த்து அதிலே ஒடுங்கியும் விடுகிறோம் கடைசியாக அவர் நாடக தத்துவம் ஒன்றும் மனித வாழ்விற்கு அப்பாற்பட்டதல்ல. மனிதனுடைய வாழ்க்கை இன்பமாக உள்ளது என்பது எதனால்? நாம் சாகப்போகிறோம் என்பதால்தானே என்று மிக தத்துவ விளக்க பேச்சாகப் பேசினார். அதற்குப்பின் இரண்டவதாக திரு. M. S. நாடார் அவர்கள் ''நாடகத் தோற்றமும் வளர்ச்சியும்'' உயர்வை சிந்திக்கும் அளவுக்கு மேன்பட்டது என்று பேச்சைத் துவக்கினார். மனித சமுதாயத்தில் உயர்வு உந்தலின் விளைவே நாடகம். பக்தி என்பது ஒரு வழி. அதன் வழியில்தான் நாடகம் உருவாகியது. ஆகவே பக்திக்கு துணை வழியாக அமைந்தது நாடகம். உடல் ஆட்டுதல், உள்ள உணர்ச்சி அத்தனையும் காட்டும் ஒரு பெரிய சாகரம். மனிதன் என்ற பஞ்சபூதங்களால் தாண்டமுடியாத உணர்வை உயர்வு தெரிந்து இயக்குவது நாடகம். ஒலியில் நாடகத்தோற்றம் அமைய முடியும். குரலுக்கு அணுக்களை ஆட்டி வைக்கும் ஆற்றல் உண்டு. பக்தி என்பது உடலைத் தவிர வேறு உபகரணம் இல்லாமல் போகும் வழி. இதுவே மண்கலை (Art) நாடகம் நுண்கலை (Fine Art) எனவே. திறமையினால், அசைவினால், பாவத்தால் ஓசையினால் தன் உணர்ச்சிகளை வைத்து உயர்நிலையைக் காட்ட முடியும் அதுவே சங்கம் என்பர் அதுதான் ஒன்று சேருமிடம். தான்பெற்ற உயர் உணர்வை முக அசைவைக்கொண்டு காட்டுவது நடனம். அதை ஓசையுடன் கூட்டுவது நாடகம். அது முன்னுக்குப் பின் முரணாக உள்ள மூட்டுகளைக்கொண்டு மனிதனை அசைத்துக் காட்டுகிறான் இது நடனம் சொல் எனும் சக்திவாய்ந்தது. உலகியல் சிக்கல்களை மேற்கொள்ளும் விதம் அவற்றினின்று மேல் செல்லும் விதம் இவை பிறந்த நாட்டிற்கு சேவைசெய்வது மனித சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடுவது என்பது பக்தியின் சிறப்பாகும். இதை உணர்த்தத்தான் ஏழு மெய்பாடுகளை கலந்தால் நாடகம் என்றும் உணர்ச்சியின் கலப்பே நாடகம் என்றும் உடற்கூற்றை அரங்கமாக்கி பாக்கியுள்ள அவயவங்களால் மனித உணர்ச்சியை பார்த்துவிடலாம் இவைகளை கதாபாத்திரமாக்கினால் நாடகம் இகம், பரம் என்ற இருபுறங்களும் தரும். செல்வத்தின் செல்வம் செவிச் செல்வம் ஐம்பொறியும் அடங்கும் ஐக்கியத்திற்கும் நாடகம் என்று தன் உரையை முடித்தார்.

அடுத்து திரு. கோவிந்தராஜ் அவர்கள் ''நாடத்தில் நவீனம்'' என்ற பொருளில் நாடகத்தின் வளர்ச்சியை குறிப்பிட்டார். கார்கி போன்ற ரஷ்ய நாடகாசிரியர் சமுதாயத்தையே மாற்றியமைத்தார். பதினாறு, பதினேழு ஆண்டுகளில் நாடகம் நம் நாட்டில் உருவாகியது. 19ம் நூற்றாண்டில் அமைச்சூர் நாடக துவங்கிற்று. அதற்குவித்திட்டவர்கள் சங்கரதாஸ் சுவாமிகள், சுந்தரம் பிள்ளை, பரிதிமாற்கலைஞர், பம்பல் சம்பந்த முதலியார் இவர்கள் மனித சமுதாயத்தின் அடிப்படைப் பண்பைக்கொண்டு எழுதிய நாடகம் அமரத்துவம் அடையும். பார்சிக்காரர்கள் இங்கு வந்தபோதுதான் நாடக வசனம் எழுத்து உருவமாக எழுதப் பெற்றது. நாடகம் மனிதனது பண்பை வளர்க்கப் பொழுதுபோக்காக வளர்ந்து வருகிறது. நமது நாடகங்கள் பெரும்பாலும் சரித்திரம், புராணம், சமூகம் என்ற தலைப்பில்தான் உள்ளது. சோக நாடகங்கள் என்பது கிடையாது என்றே சொல்லலாம். இசை, நடனம், சொல் (நாடகம்) மூன்றும் ஒன்றாக இணைந்துள்ளது நமது நாட்டில். ஆனால் ஜப்பானிய நாட்டிலே சமயசம்மந்த நாடகமும், சமுதாய சம்மந்த நாடகமும், வரலாறு சம்பந்தப்பட்ட நாடகமும் இருக்கிறது. ஆனால் நம்நாட்டில் அவ்வளவு சிறப்பான முன்னேற்றமில்லை. நாடகத்துக்கு கற்பனைதான் கருவூலம். அது மனிதனின் ஒருதுறைவை அவன் வாழ்வில் பாதிக்கும் கருத்தாகவே அமையும் நாடகத்திற்கு என்று நாடகத்தில் நவீனம் முழுமையும் பெறவில்லை என்று தன் பேச்சை முடித்தார். தலைவர் அவர்கள் இவ்விழாவில் மிகுந்த, தெளிந்த, பலதரப்பட்ட நல்ல கருத்துக்கள் வந்துள்ளன அவை நாடக இயக்குனர்களுக்கும், நடிகர்களுக்கும் பயன்பெறும் என்று கூறினார். சங்கப் பொதுச் செயலாளர் திரு. பட்டுக்கோட்டை குமாரவேல்

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

தல் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் மூலம் அரசை அடியோடு மாற்றி அமைக்கும் அதிகாரம் மக்களுக்குத் தரபட்டது. சில சமயங்களில் "பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாஸ்திரங்கள்" என்று அமரகவி பாரதி தெளிவாக எடுத்துக்கூறி எச்சரித்திருக்கிருர்.

சட்டம் என்பது நீதி அதனை தடுக்கவோ, பதுக்கவோ எவரும் முனையக்கூடாது. சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம். அதற்கு வேண்டியவரும் இல்லை வேண்டாதவர்களும் இல்லை நல்லோர்களுக்கு சட்டமே ஒரு கவசம் என்ற எண்ணம் இன்று ஆட்சியிலிருப்பவர்களுக்கு முதலில் மனதில் பதியவேண்டும். அதனை அவர்கள் தங்கள் தமிழ் உள்ளத்தால் தமிழ்நாடு பூராவும் பரப்ப வேண்டும். தங்கள் திறமையை, சொல்லாற்றலை இந்த வகையில் அவர்கள் பயன்படுத்தவேண்டும் நாட்டு மக்களும் சட்டத்திற்குச் கட்டுப்பட்டு வாழ தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். தமக்கு பிடிக்காதவர்களை தாமே தண்டித்து நீதி வழங்கிவிடுவது என்ற மனோபாவம் தமிழ் மக்கள் உள்ளத்திலிருந்தே அகலவேண்டும் தமிழ் மகன் சான்றோராக வாழ ஆட்சியிலிருப்போர் நம்பிக்கை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

போற்றியோநமச்சிவாய பூங்கழல் போற்றி! போற்றி!
போற்றியோ அருட்பெருஞ்சோதி புனிதனே போற்ற்! போற்றி!
போற்றியோ தனிப்பெருங்கருணையே பொன்னடிபோற்றி! போற்றி!
போற்றியோ ஓம் இராமலிங்காய ஜோதியே போற்றி! போற்றி!

ஓம்.

நன்றி நவில உலக நாடகவிழா நாட்டுப் பண்ணுடன் இனிது நடந்தேறியது. இச்சிறப்புக் கூட்டத்திற்கு பல நாடகமன்ற இயக்குநர்களும் கலைஞர்களும் பங்குபெற்றது ஒரு சிறப்பான அம்சமாகும்.

உடனே நடைபெறவேண்டிய

இரண்டு தமிழ்ப் பணிகள்

நமது தாய்மொழியைப் பாட மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் ஆக்கும் பணியில் தீவிரமாக முனைந்துள்ளோம். "எல்லாவற்றையும் தமிழில் கொண்டுவர முடியுமா, தமிழால் தர முடியுமா?" என்னும் அய்யங்கள் ஒரு பக்கம் எழுந்துகொண்டு இருக்கின்றன. இந்த அய்யங்களை நமது ஆர்வமிக்க பேச்சுக்களால்மட்டுமே நீக்கிவிட முடியாது. பல துறைகளிலும் புதுப்புதிய தமிழ் நூல்கள் உருவாக வேண்டும்; அவை, கூடியவரையில் பிறமொழிகளின் துணை இன்றியே அமைய முடியும் என்பதையும் நாம் மெய்ப்பிக்க வேண்டும்.

தவிரவும், தமிழில் உருவாகவும் புதிய துறை நூல்கள் தமிழில் உள்ள சொற்களையே மிகுதியாகக் கொண்டிருந்தால்தான் தமிழர்கள் அவற்றை எளிதாகப் புரிந்து உள்வாங்கிக் கொள்ளுவார்கள். ஆதலால், முடிந்தவரை தமிழில் ஏற்கனவே உள்ள சொற்களையும் புதிதாக ஆக்கும் தமிழ்ச் சொற்களையுமே இத்துறைகளில் மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்; தவிர்க்க முடியாத இடங்களில் மட்டுமே பிறமொழிச் சொற்களைக் கடன் பெற வேண்டும்.

இதற்குத் துணையாக, உடனடியாக இரண்டு பணிகள் நடந்தாக வேண்டும். (1) தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வழக்கில் உள்ள தொழில்துறை, கலைத்துறைப் பழகுதமிழ்ச் சொற்களைத் திரட்டித் தொகுத்து வகைப்படுத்த வேண்டும். (2) தொல்காப்பியம் தொடங்கி நேற்றுவரை வெளிவந்துள்ள எல்லாத் தமிழ் நூல்களுக்கும் சொல் அகராதியும் சொல் அடைவும் தயாரிக்க வேண்டும். இந்த இரண்டு பணிகளும் நிறைவேறினால், நமக்குத் தெரியாத எவ்வளவோ சொற்கள் (புதிய துறைகளுக்குப் பயன்படக் கூடிய சொற்கள்) தமிழிலேயே இருப்பதை அறிவோம்; தேவையான புதிய தமிழ் சொற்களை ஆக்கும் புதுப்புதிய வழிமுறைகளையும் அறிய வருவோம்.

நமது தமிழ்மொழி பல துறைகளிலும் செழிப்புற்ற மொழியாக வளர வேண்டிய இச் சமயத்தில், இவ்விரண்டு பணிகளும் மிக முக்கியம் என்பதை ஏற்கும் அன்பர்கள், நமது அரசையும் தக்க அறிஞர்களையும் இப்பணியில் ஈடுபடுமாறு தூண்டுவார்கள் என்று நம்புகின்றோம். அவ்வாறு செய்ய வேண்டுமென்று அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்,

சாலை இளந்திரையன்
சாலினி இளந்திரையன்

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

அப்பர் சுவாமிகள் "உன்ற நாமம் பயின்றேன் உனது அருளால் திருவாய்ப் பொலிய சிவாயநம என்று நீறு அணிந்தேன்" என்று எவ்வளவு மனநிறைவு காட்டுகிருர் என நாம் நோக்கி, அதேபோல் கடவுளின் நாமாவளியையே நம் மூச்சுக் காற்ருக ஆக்கி மனநிறைவுபெற்று ஸாயுஜ்ய பதவி அடைய முயலவேண்டும்,

"பஜ்கோவிந்தம் பஜகோவிந்தம்.
பஜகோவிந்தம் மூடமதே
கரஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே
நஹிநஹி ரக்ஷ திடுக்ருங்காணே"

'காலம் நெருங்கி யமன் வந்தபோது இந்த டுக்ருங்கரணே என்ற இலக்கண ஸுத்ரம் உன்னைக் காப்பாற்றுது-காப்பாற்றுது. (ஆகையால்) (காப்பாற்றப்பட வேண்டி) கோவிந்தனை பஜனை செய், கோவிந்த பஜனை செய், கோவிந்தனை பஜனை செய்,

ஆதி சங்கரர்.

ASTHMA CURE IN 3 DOSES

Take amazing herb, prescribed by a great Saint. Thousands have been bewildered by its amazing results. The herb is distributed free of cost to the poors by Shiv Kumar Kiyal, 40, Upper Chitpur Road, Calcutta-7. Write in legible English or Hindi.

Edited & Published by the owner A V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2.